உ

# பக்திரசக் கீர்த்தனை.



இஃது ஸ்ரீ மல்லக்கவுண்டனூர்

**கு. பழனிசாமி நாயகர் அவர்களால்**

இயற்றப்பட்டது.

பாகல்பட்டி போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர்

**திரு. P. S. அனந்தநாராயண அய்யர்**

அவர்களால் பார்வையிடப்பட்டு

சேலம் பட்டக்கார் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1935.

[0—1—0

026:417
N35
122194

உ

# கோயமுத்தூர் ஜில்லா (மாஜி)

## சகலகலாவல்லி ஆசிரியன்

# மா. வேங்கிடரத்ன பாவலரியற்றிய

## சாற்றுக்கவி

### அறுசீர்க்கழில் நெடிலடி ஆசிரியம்

அமிழ்தினு மாண்புடைய தெனக் கனைகடற்
சூழுலக மெலாம் அறையுந் தெய்வத்
தமிழ் மொழியிற் பத்தியின்ப கீர்த்தன
மென்றொரு நூலை சாற்றினன் பூங்
கமழ் சோலை சூழ் மல்ல நகரிலனு தின
மருவி கருணை சாந்தம்
திகழ் நெடுங்கட் பொலிவுடைய பழனியப்பத்
திருநாம முற்ற வேளே.

1114 ...ற்றம்பலம்.

## காப்பு வெண்பா.

சீர்சொன்மா லேசூடும் சிவகாமி மீதரிமீ
தார்சொன்மா லேஞ்சூடும் வாணிமீ—தார்வமொ
அம்புவியி லினிய அறுமுகன் மீதும்பாட
சம்புவின் மகன்ருள் சரண்.

ஆனை முகனினிய அடிமலர் போற்றியே
தேனை யனையதீஞ்சொற்கீதம்—மாநிலத்தில்
மதிக் கெங்கை சூடியென்மீ தவனிடியர்மீது மகிழ்ந
துதிக் கெக்கு மியம்புவாம் துதி.

## அவையடக்கம்.

முற்றுணர்ந்தப் பெருமை மூதறிஞரே நன்கு
கற்றுணராச் சிறுமையேன் கவிதையில்—குற்றங்க
ளூறினு மெல்லோர்க் கிறைவன்மீ துரைத்ததால்
பொறுமி னுமக்குப் புகழ்

## விநாயகர் துதி.

இராகம் பரசு] [தாளம் சாப்பு

பல்லவி

ஆனைமாமுகனே இங்கு
ஆகு வாகன மீதிலேறி வா (ஆ)

அநுபல்லவி

மோனை முக்தமிழ் தேனை யொத்திட
யானியற்றிட தா அருள்கிட (ஆ)

சரணம்

போகும்போதுடல் பாடைமேல் புகழ்ந்
தாகுமா உனை நாடவே
பாகு தேனென பழனிசாமி சங்
கீதமே தினம் பாடவே (ஆ)

இராகம் இந்துஸ்தான் தோடி] [தாளம் ஆதி

பல்லவி

விக்கினேஸ்வரனே விரும்பினேனருளே
இகபர மிரண்டிலும் சுகம் தரும் பொருளே

அநுபல்லவி

விக்கினமெல்லாம் விலகியே ஓட
விபுவே பிரபுவே கீதங்கள் பாட (வி)

சரணங்கள்

நக்கன் மகனே நான் மறை முடிவே
நம்பியவர்க் கருள் செயும் சுடர் வடிவே
முக்கண் முதலே மூலாதரனே
முறையே கேட்டரு ளிறையே இறையே (வி)

தக்கன் செய் யாகத்தை தகர்த்தவன் மகனே
தயவொடு வந்தெனை சுடர்தரு முகனே
பக்கமிருந் துகார் பரம சுகனே
பதியே பழனித் துதியே அணிந்த (வி)

## சிவகாமி துதி.

இராகம்-எதுகுல காம்போதி] [[illegible]ம் சாப்பு

பல்லவி

அம்மனீருலகமீன் றின்னம் கன்னியென்ப
ருன் புகழ் சொல்ல ஆமோ

அநுபல்லவி

உமைநீ ரன்றோவென் னுள்ளத்துன்பங்கண்டும்
எமைநீ ராட்கொள்ளா திவ்வாறிருக்கலாமோ (அ)

சரணம்

நாலெட்டறம் வளர்த்தே நானிலமுய்ய நின்றாய்
நாயகனைத் தழுவி முலைத்தழும்புச் செய்தொன்றாய்
மேலிட்ட நீற்றன்பா லிடப்பாகம் பெற்று நின்றாய்
மேதினி புகழன்னையே பழனிக்கோதியருளுநன்னை
[நம்பினேன் (அ)

இராகம்-இந்துஸ்தான் தோடி] 2048 [தாளம் ஆதி

பல்லவி

ஈஸ்வரியே பரமேஸ்வரியே என்
றவளனையாய் இடர்ப்படவிடலாமோ (ஈ)

784.0954

அநுபல்லவி

தேசுமிகும் பாஞ்சுடர் வடிவுடைத்தாயே
தீனன்மேலிரங்கா திருப்பது தகுமா (ஈ)

சரணம்

கரிமுகனெனில் அருளாதிருப்பாயோ
கந்தனெனில் அருளாதிருப்பாயோ
பருவத ராஜனுடை மகள் நீயே
பழனிசாமிக்கருளாத தேன் தாயே (ஈ)

## விட்ணு துதி.

(காளமேகப்புலவர் பாடிய)

வெண்பா

கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன் வேறோ
இடம்பெரிய கண்ணொன்றை ஈந்தா—னுடம்புதனிற்
சொம்பாதி யானான் சுமக்க வெருதானான்
அம்பானான் றேவியுமானான்.

926:417 N3

இராகம் மோஹனம்] [தாளம் சாப்பு

பல்லவி

வைகுண்ட மாலெனு மாபவனே அரன்
நெய்கொண்ட பாலென ஆயவனே (வை)

அநுபல்லவி

மைகொண்ட மிடருடையோனே பரன்
கைகொண்ட மலைவில்லம் பாயவனே வரம் (வை)

சரணங்கள்

அரவல்கு விளமுலை பெண்ணுரு வெடுத்தாய்
அமர்தம் பகிர்ந்தன்று அமரருக் கொடுத்தாய்
பரனது இடப்புறம் சத்தியாய்ப் பிடித்தாய்
பழனிசாமிக்கருள் பாந்தள்மே னடித்தாய் (வை)

## கலைவாணி துதி.

இராகம் காம்போதி] [தாளம் ஏகம்

பல்லவி

சகலகலா வல்லி துதிப்பேன்
சந்ததம் உன் திருப்புகழைச் சொல்லி (ச)

அநுபல்லவி

புகழகலா திருக்கவுந் தமிழ் செல்வி
புலவர்களிகழா திருக்க என் கல்வி (ச)
நான்முகன் நாவினி லோங்கிடுந் தாயே
நாயனையே னுனை போற்று நின் சேயே
பான்மை திருச்சங்கீதமும் ஈயே
பாடப் பழனிசாமிக்கு நீயே (ச)

## சுப்பிரமணியர் துதி.

ராகம் சங்கராபரணம்] [தாளம் சாப்பு

பல்லவி

அன்னை சிவகாமி மகனே எந்தனை நீ
ஆதரியாறு முகனே

அநுபல்லவி

நின்னை பணிந்துயா னின்னை துதிக்கவும்
நினதடி யனுக்குன தருள்புரி குகனே (அ)

சரணம்

தன்னை யறியாமல் தடியனாய் திரிந்தேன்
தருமங்க ளொரு நாளுஞ் செய்யாமலிருந்தேன்
பொன்னிலமாதரை பழனியும் பெருந்தேன்
பூமியிலென நினைத் தேமனுக்கிருந்தேன் (அ)

ராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் அடி

பல்லவி

மால் மருகா வடி
வேல் முருகா திரு

அநுபல்லவி

பாலாபிஷேகப் பழனிமா மலை
மேலுறைவா யென்றனுக் கருளாய் திரு

சரணம்

கால்களும் நோகவும் காவடி யெடுத்தே
காணவரு வாருன் சேவடியடுத்தே
பால் பழந் தேன் பஞ் சாமிர்தப் விடுத்தே
பக்தி பண்ணுவார் துன்பங் கெடுத்த (மா)
அரனார்க் குகந்த மகனீ முருகா
அழகு மயிலேறு மையனே குருவாய்
பரனார்க் கருளிய பாலனே வருவாய்
பழனிசாமிக்குன் தெரிசனந் தருவாய் (மா)

ராகம் தன்யாசி] [தாளம் ரூபகம்

பல்லவி

கூறுவாய் சேவல் கொடியே சென்று
குகனாரிடம் பரமானந்த சுகமே எனக்கருளும்படி (கூறு)

அநுபல்லவி

ஆறுமுக னுன்னை நினைந்தழு தானென
அரனார் செவிதனிலே மொழிபவனே மனமிரங்காய்
[என (கூ)

சரணம்

சூரபத்ம னாதி யசுரரைக் கொன்றே
சுரர்க்குலகீந்த சுப்பிரமண்ய னென்றே
ஆர்வமாய் பழனி துதிக்கிறானென்றே
அய்யா முருகையா சொலுங்
துய்யா அணி மெய்யா யென (கூ)

ராகம் காம்போதி] பல்லவி [தாளம் ஆதி

மணியே மான் மருகா மயிலேறி
இனிதே வா முருகா (ம)

அநுபல்லவி

கனியே என் பவப்பிணியே தவிர்த்து
கருணாகரனே இது தருண மருள் செய (ம)

சரணம்

சாகா வரந்தா எனக்கேட்டேனே
சாமி கொடாவிடில் விடமாட்டேனே
பாகே கனியே எனப்பஜிப்பேனே
பழனிசாமி நின்னருள் புசிப்பேனே (ம)

இராகம் [illegible]] கண்ணிகள் [தாளம் ஆதி

சண்முகனே சண்முகனே சர்வதயாபர குகனே
பன்மார்க்க மறிந்தவர்கள் பாரிலுன்மீ தென்நாளும்
சொன்மார்க்க மறிந்தியம்பும் சொன் மாலை யணிந்தவனே
நன்மார்க்க மறியாத நாயேனை யாட்கொள்வாய்
சன்மார்க்கம் வளர் மல்ல பதியிலுறை சண்முகனே (ச)

பொங்கோதம் தாண்டிப்போய் புன்றொழில்செய் யசுரருடன்
அங்கேதான் பொருது முடித்த மரர்களுக் கரசீந்தாய்
இங்கே தம் மாற்றியருளீசன் திரு மகனன்றோ
சங்கீதம் வளர் மல்ல பதியிலுறை சண்முகனே

மல்லப்பதி தனில் வாழும் மயிலேறும் வேலவனே
நல்ல தவம் செய்தின்றே நன்னிலையை சேர்ந்திடவே
அல்லலுறு மவனிதனில் பழனிசாமிக் கரநெறியை
சொல்லியருள் செய்வதொடு கார்ப்பதுவு முன் கடனே. (ச)

## சிவபெருமான் துதி

ராகம் நாட்டை] [தாளம் ரூபகம்

பல்லவி

ஸ்ரீ உமை பதியே அருள் செய்குவாய் நீயே (ஸ்ரீ)

அநுபல்லவி

ஸ்ரீ உமைக் கொரு பாகந் தந்தாயே செகத்
சராசர உயிர்க்குத் தாயே
ஸ்ரீ உமா பரமேஸ்வரன் நீயே
சிறித்து புறத்தை எறித்து
சரித்தோலுரித்து தரித்த (ஸ்ரீ)

சரணம்

ஜீவர்க் கூட்டி வளர்க்குங் கையா
சிற்றம்பலத்தில் நடித்த அய்யா

யாவற்றுள்ளும் நின்ற மெய்யா
ஆதியந்த மிலாத அய்யா
மூவரி லொருவனுப துய்யா
முத்தொழிலும் நடத்துங்கையயா
சா வரும்போதெனைக் காரய்யா
சகமிசை பழனியின் னுரைமீய
சந்திரன் திகழ் முடி யிறையே (ஸ்ரீ)

ராகம் மோஹனம்] பல்லவி [தாளம் சாப்பு

மாடுடைய பாதேவா அருள யான்
விடடைய வா தேவா (மா)

அநுபல்லவி

தோடுடையா யென்றவர் மொழி பொருளே
கேடடையா வண்ண மெனைக் கார்த்தருளே (மா)

சரணங்கள்

அன்னை தந்தை யான குருவே—நல்ல
அன்பர்க்கருள் செய்யும் கற்பகத்தருவே
பொன்னிலம் பெண்ணவா ஒருவே—உந்தன்
பொன்னடிக்காளாக்கி வைத்தருள் குருவே. (மா)

கைவண்ண சிலையுடை யண்ணா—தேவர்
கருத்தின் வண்ண முப்புறஞ் செற்ற திண்ணா
உய் வண்ண மிபானு முக்கண்ணா—நீரும்
உகந்த வண்ண மாக் கருணை செய்யண்ணா
மால்வண்ண மருள் செயுங் கனியே—இருள்
மைவண்ண கண்டத்து மாற்றிலா மணியே
பால் வண்ண நீற்றின் மெய்யணியே—பார்க்க
பழனிசாமிக் கருளி தீர்ப் பவப் பிணியே (மா)

இராகம் கமாஸ்] பல்லவி [தாளம் ஆதி

நடராஜ சிகாமணியே உன்னை
நம்பிய பழனி பாட்டணிந்தருளினியே

அநுபல்லவி

கெடவினை தீர்த்தெனக் கருள் ப்ரகாசா
கிளரொளியே எங்கும் படரொளியே மிகுஞ்சுட
[ரொளியே (ந)

சரணங்கள்

படமுடியா தினித்துயர் தீர்த்தருள் சென்மம்
வேண்டாம் பணிந்தேன் வேண்டாம்
விடமுடியாதென பிடித்தவர்க் கருள்வாய்
வேண்டாம் சோதிக்க வேண்டாம் (நட)

அம்பிகை பாகா நம்பியவர் சில
ஆண்டாய் பஜிக்க ஆண்டாய்

அம்புவி மிசையுனை நம்பியிருந்தேன் பல
ஆண்டாய் சொல்லப்பாண்டாய் (ந)

ராகம்-கமாஸ்] பல்லவி [தாளம் ஆதி

எவரையும் நா நம்பமாட்டேனே ஸ்வாமி
யாதியந்த மில்லா அய்யனே நினையன்றி (எ)

அநுபல்லவி

பாரையும் விண்ணையும் பார்த்து ரக்ஷிக்கின்ற
பரமனே நினையன்றி பாமர மாக்களை (எ)

சரணம்

தொல்லுலகில் பழனி சொல்லறம் விடுப்பார்
துரிசுடை யோர்க்கெமன் தண்டனை கொடுப்பார்
நல்லவரென் றடுத்தவர்களை கெடுப்பார்
...ம்பி வரை நடு ஆற்றினில் விடுப்பார் (எ)

ராகம்-எதுகுல காம்போதி] பல்லவி [தாளம்-சாப்பு

அயனீரருளாயே லழுதே சிந்திப்பதல்லவா
லடியே நானென்ன செய்வேன் (அ)

அநுபல்லவி

தபெணி யிருப்பாயேல் தனிய நானென்றுய்வேன்
எபொனீ ரருள்வதென்றுனை மனம் நொந்து வைவேன் (அ)

சரணம்

அந்தோ! அந்தோ! வென அநியாயமாகவே
அடித்து நரகிலெமனடித்து தள்ளும் நோகவே
பந்தோ வெனது மனம் படத்தின் பாம்பாகவே
பறந்து கறங்குதென் செய்வனேகனே
பரிந்து பழனிக்குமையின் பாகனே (அ)

ராகம் சாவேரி] பல்லவி [தாளம் ஆதி

உந்தன் சீர் பொன்னார் பாதமலர் தானீ
உந்தன் சீர் பாடுவேன் காவா சர்வேசா (உ)

அநுபல்லவி

எந்தன் மீதில் வாதா ஈஸ்வராதி தீரா
எந்தனுக்கருள் நித்தியா சத்தியா (உ)

சரணம்

சிவகாமிக்காக பாதி தந்த மெய்யா
சிவனின்னடியை தினம் போற்ற செய்யா
தவமான அன்பர்க்கருள் செப்புங்கையா
பவமான தீர்பழனி சாமிக்கையா (உ)

ராகம் தோடி] பல்லவி [தாளம் சாப்பு

ஏமன் வந்தா லேங்கு மனது
ஏழையேனுக்குன் தாளையே தாராய் (ஏ)

அநுபல்லவி

நாமமே சிந்தை நாடினேனங்கு
மார்க்கண்டனுக்கருள் கார்க்ககண்டனே யிங்கு (ஏ)

சரணம்

பூதவுடம்பழிந்தாலென் செய்வேனே
பொய்யில்லன்பர்க் கருள் மழை பொழிவோனே
பாதமலர் தினம் பணிந்தேன் செந்தேனே
பழனிசாமி பயம கற்று எங்கோனே (எ)

ராகம் நாதநாமகிரியை] பல்லவி [தாளம் ஆதி

சுடர் வண்ணக் கொழுந்தாய சிவமே என்னா
இடர்பட முடியாது தீரெந்தன் பவமே (சு)

அநுபல்லவி

படமெடுத்தாடிடும் பாம்பணிந்தவனே
விடமடுத்தடக்கிய மிடறுடையவனே (சு)

சரணம்

அடைபவர்க் கருள் செய்து ஆனந்தமளிப்பாய்
விடையண்ண-லென்னாளும் விழுப்பொருள் சொலிப்பாய்
படை வில்லம்பிருந்தென்ன நுதற் கண்ணை விழித்தாய்
கடையூழி முடிவென மதன்புர மழித்தாய் (சு)
காலன்றன்னை மலர்க்காலினால் வென்று
பாலன் மார்க்கண்டனுக்கு அருளினாயன்று
ஆலந்தேவர்க்காக அருந்தினாய் சென்று
சீலன் பழனிக்கருள் செய்குவா யின்று (சு)

ராகம்·சங்கராபரணம்] பல்லவி [தாளம் சாப்பு

செத்தால் வந்துதவுவாரில்லை—நல்ல
அத்தா உனையன்றி துணை யெனக்கில்லை (செ)

அநுபல்லவி

பித்தா பிறை சூடி என்றவர்க் கல்லை
இத் தாரணியில் பொன்னாக்கினா யொல்லை (செ)

சரணம்

உத்தா ருறவினர் இன்றியோ ரெல்லை
ஒரு கோடி யிருப்பினு மொரு பலனில்லை
கத்தா நினைந்துருகா மனக்கல்லை
கரைந்துருக பழனிக் கருள் செய்யொல்லை (செ)

ராகம் இந்துஸ்தான் தோடி] பல்லவி [தாளம் ஆதி

ஈஸ்வரனே பரமேஸ்வரனே என்னை
யாள்வதுன் கடன்தானே ஏழை பங்காளனே

அநுபல்லவி

தேசோம யானந்தனே தினந்தேடி
திருமாலயனுங் காணா தீவண்ண அரனே (ஈ)

சரணம்

ஈன்றளித் தழிக்கின்ற எம்பெருமானே
எழில்மிகுங் கைலையி லுறையுஞ் செந்தேனே
ஆன்ற உலகமிசை சிவபெருமானே
அன்பன் பழனி சாமிக்கான எங்கோனே (ஈ)

ராகம் பைரவி] பல்லவி [தாளம் சாப்பு

இறைவனே யுந்தனை யான் பூஜிக்
கின்றேனே ஸ்வாமி (இ)

அநுபல்லவி

கறையணி மிடற்றனே காலன் பயங்கரனே
காளைமீதேறி வருவாய் காலங்கடந்தவனே (இ)

சரணம்

அறுகணி முடியோய் நின்னடியர்பால் வந்தனையே
அன்பன் பழனிக்கருள் தெரிசனம் தந்து நீயே
சிறு வயதிலிருந்து செய்தேனுன் சிந்தனையே
சிரித்து புரத்தையன்று எரித்து மகிழ்ந்தனையே (இ)

ராகம் முகாரி] பல்லவி [தாளம் சாப்பு

கொஞ்ச மேனுன் நெஞ்ச மிரங்கலையே—உனக்
கோடி வந்தனம் செய்து பாடினாலும் நினை (கொ)

அநுபல்லவி

பஞ்சபாதகம் செய்தவனென்றோ
பரமனே அருளா திருப்பது நன்றோ (கொ)

சரணம்

நாதாநின்னுமத்தை செபித்திருந்தாலும்
நாய்போ லலையுமென் னெஞ்சமென்னாளும்
பாதக மொன்றுஞ் செய்திலே னையாளும்
பழனிசாமி பல தடவை சொன்னாலும் (கொ)

ராகம் மோஹனம்] பல்லவி [தாளம் சாப்பு

இன்ப மென்று எண்ணி துன்பக்கடலில் வீழும்
என்னை ரக்ஷித்தருள்வாய் ஈசனே (இ)

அநுபல்லவி

அன்பும் பக்தியும் விட்டு அறிவின்றி சோகத்தில்
அவனி மிசை யலைந்து அரிவையர் மோகத்தில் (இ)

பந்தபாசத்தாலிந்த பாரினிலொன்றோ
பற்பல சென்மங்கள் வந்தது அன்றோ
இந்த மயக்கில் யான் வீழ்வதும் நன்றோ
ஏமாந்து விழுந்த பழனிக்
காமாந்த காரமதனில் (இ)

ராகம் ஆனந்தபைரவி] பல்லவி [தாளம் சாப்பு

பறந்தோடுதே என் மனம் என்றுய்வனோ
நான் பார்மீதிலேன் தோணினேன் (ப)

அநுபல்லவி

மறந்தால் பாடுபட்டு நான் பலவாறெல்லாம் திரிந்தோடி
பலதர மிறந்து பின்னிங்கு பிறந்து வந்துன் மாதேவா
மலர்ப்பாதம் பணிகையில்

சரணம்

உன்மே லில்லே தீதோ—செய் தேன் தீது
உண்மை யுரைத்தேன் காதோ—இல்லேயே கேட்க
என்மேல் பிழை வாதோ—இன்ன முமையா
இரங்கி யருளலாகாதோ—துன்பமே எனக்
கியானே செய்து கொண்டதை நினைந்து யரடைந்
(தெப்போதும்.
இன்பமாய் நிறைந்தெங்கு நின்றவனே யுனை
பழனி பஜிக்கும் போதும் (ப)

இராகம் கதன குதூகலம்] பல்லவி [தாளம் ஆதி

மகனிம்சை படேனருள் தந்தை நீ
மாகருணை மாகேஸ்வரா (ம)

அநுபல்லவி

இகமீதிலே இருவினையால் எனைபிணித்தாய்
நீக்கு ஈசா உனது (ம)

சரணம்

சுரர்க்கந்த நாள் விஷமுண்டவா
சொலுமாகம மறை சொன்னவா
திரிக் கண்ணுளாய் விஷமோ யிந்த
வினையுண்டருள் பழனிசாமிக்குன் (ம)

ராகம் சங்கரா பரணம்] பல்லவி [தாளம் திரிபுடை

எந்தையே நானென்று உய்வேன்
எழில்மழு வோனே கோனே (எ)

அநுபல்லவி

செந்தாமரை யனைய திருவடியம்மை யின்று
தந்தா தரிக்க என்னை இரங்கி வரலாகாதா (எ)

சரணம்

துன்பக்கடலில் மூழ்கி
அலேயுதுரும்பா யானேன்
அன்பர்க்கருள அரசே
பழனிக் கருள் செய்யாயோ (எ)

பல்லவி

முன்னுகம் கொன்றுரித்தோல் தன்னை யேலிடலாமோ
பொன்னாலும் நெய்த ஆடையிலேயோ (மு)
பன்னகப் பாம்பையே மேலணியலாகுமோ
என்னையனக்குத் தங்காபரணமிலேயோ (மு)

சரணம்

பொன்னம்பலமிருக்க வெள்ளிமலே யிருக்க
புகழ்சூழ் மதுரையிலே வெள்ளியம்பலமிருக்க
இன்னம் காசியிருக்க யாதுக்கிவ் வண்ணம் செய்தீர்
இறைவா பெரியோய் நினக்கோராளமோ யிருக்க (மு)

பொன்னுகம் வில்லாய்க்கொண்டு புரம்பட வெய்தோனே
நின்னுமம் உச்சரி புனிதர்க்கருள் செய்தவனே
பன்னுகம் வேதங்கள் பாரினுரை செய்தவனே
பழனிசாமிக்கருளா யயன் சிரம் கொய்தவனே (மு)

ராகம் காம்போதி] பல்லவி [தாளம் ரூபகம்

தெய்வமே நா நம்பினேன் நின்னை திருத்தாள் பணிந்து
தேவர் போற்றும் (தெ)

அநுபல்லவி

செய்வானு கூலம் செயுமெனக் கென்றே
சைவ சமய நெறிதனில் நின்று (தெ)

சரணம்

செய்யுங் கன்மத்தால் சிவ சிவா என்றும்
செ[illegible]மங்கள் வருமென் றுணர்ந்து யானின்று
உய்யும் வழிதேடி துதிக்கின்றேனன்று
உதவி செய் பழனிசாமிக்கு னையென்றும் (தெ)

இராகப் நாடக்குரிஞ்சி] பல்லவி [தாளம் ஆதி

காளை மீது இங்கு தர்மமாய்
கண்களிப்ப ஈசா காணயான் வாரும்

அநுபல்லவி

தாள தாமரை சூடும் மாமிகு
தலைமைச் சுந்தரர் தானெனக்கிலையோ (கா)

சரணம்.

நாளைக்கோ லென்றைகோ லெமன் வருவானே
நான் படும்பொ தெனக்கு யார் துணை தேனே
பாளை மேல் வாளைமீன் பாய்தில்லை கோனே
பதியே பழனிக்கருள் உமாபதியே (கா)

இராகம் சங்கரா பரணம்] பல்லவி [தாளம் சாய்ப்பு

நித்திய லிங்காதரா சராசர
நீநிலச்சர்வேஸ்பரா பராபர (நி)

அநுபல்லவி

நித்த மரகரா சொல்வே னரவாபரா
நீரோடு மதி சடாதார எனை காரா
நித்தியப் பொருணீயன்றோபா
னித்தின முதல் துதித்துனை தினம்
பத்தி செய்தினி முத்தியடையவும்
சத்தி யொடு வந்தித்தினமருள் (நித்)

சரணம்

சற்குருவே உமை பவள் மணவாளா
சன்மார்க்கர்க்கருள் செய்யும் சர்வதயாளா
கற்கு முறையறியா சிறியேன் காலகலா
கற்பக சாகாக்கல்வி அருள் திருந்தாளா (நி)

Q26:1417 NB

பொற்பதம் பணிந் திருந்து மென் மனம்
பற்பல பொருள் நாடி யோடுது
அற்ப மனசடங்கிலே யென் செய்குவேன்
தற்பாதம் பொருளே பழனி புகழ் (தி)

ராகம் சுருட்டி] பல்லவி [தாளம் ரூபகம்

தாளைக் கர்த்தனே நாடினே னெமக்
கருள் தாரையா (தா)

அநுபல்லவி

காளைமீது கந்தமர்ந் திங்கு வந்தே
காணத் தெரிசனந் தாருங் கண்ணுதலே (தா)

சரணம்

சீலன் மார்க்கண்டன் நின் தாளே பூஜிக்கும் போ
தவனை பிடிக்கவே—சென்ற
காலனைக் காலினல் காய்ந்து நட்ட மலர்க்
காலை பிடிக்கவே—இந்த
பாலன் பழனிசாமிக் கருளாத தேன்
புகழை படிக்கவே—கடன்
ஆலகாலத்தை யமுத மென உண்ட
கண்டனே வந்த
சண்டனை யுதைத்த (தா)

ராகம் முகாரி] பல்லவி [தாளம் சாப்பு

எந்தைக்கு நினை வென்மேல் வருமோ—ஏற்றில் வந்
தென்றைக்கு எனக்கருள் தருமோ (எ)

அநுபல்லவி

தந்தை மனம் பிள்ளைமேல் தணிந்துவிட்டுப் போகுமா
எந்தைக்கு நெஞ்சார எனை விடலாகுமோ (எ)

சரணம்

அந்தோ என் செய்குவேன் அசை வலையிலோடும்
சிந்தோதக்கடல் மனம் எனையிழுத்துக் கொண்டோடும்
பந்தோபம்பரம் காற்றே பறவைப் புல்லென ஓடும்
வந்தே பழனி சாமிக்கருள யீசனகிய (எ)

ராகம் மத்தியமாவதி] பல்லவி [தாளம் ஆதி

ஸ்ரீதேவா உமா தேவா

அநுபல்லவி

ஸ்ரீதேவா எனப்போற்று மன்பர்க் கருள்வாய்
காரா யெந்தனை ஸ்ரீ கண்களால் பாராய் (ஸ்ரீ)

சரணம்

திரி மூர்த்திகளி லொருவனுப ஈசா
தேவே யெனை யுந்தனுக் காளாய்க்கொள்ளீசா
திரி நேத்ரனகிய பரமேசா சர்வேசா
ஈசா பழனிபிரிய நேசா விஸ்வேசா (ஸ்ரீ)

ராகம் ஹம்ஸத்வனி] பல்லவி [தாளம் ஆதி

திருநகை செய்து திரிபுர மெரித்தவா தேவர் தேவே
தேவர்களுக்காகவே தி

அநுபல்லவி

குருவாக வந்தின்ப நெறியோதுவாய் யீடேறவே நா
னினிமேல் தேவா தேவா தி

சரணம்

சிவபத்தர்க் கீடாயிந்த பாரிலெங்கும்
திடமாய் சொலவே தடியர் புகழ் தங்கும்
பவமறுத்தன் பருள்ளத்தில் விளங்கும்
பாதம் பழனிக் கேட்கின்றது வழங்கும் தி

ராகம் மத்தியமாவதி] பல்லவி [தாளம் ரூபகம்

ஆலகாலந் தன்னை யுண்டு
ஆதரித்தருளுங் கோவே ஆ

அநுபல்லவி

நீலமாய் கண்டத்தவே
நீநிலம் மாவிண்ணை யாள ஆ

சரணம்

வினையினிலிருந்தெனை விடுவித்துன்
திருவடி மலர்தனை கொடுத்தே
துணை பழனி சாமிக்கருளாய்
தூய திருவாயா லன்று ஆ

ராகம் சக்கரவாகம்] பல்லவி [தாளம் ஆதி

மூரிவறும் பொருளே சுக
வாரியே அருளே நரை மூ

அநுபல்லவி

பாரிலே மிகுந்தாசை யாலலைந்தேன்
பக்தி செய்துனை தினம் பஜித்திடவே விழைந்தேன் மூ

சரணம்

ஆசாபாச வினை வயமே தினம்
அகப்பட்டடைந்தேன் மிகப்பயமே
தேசோ மயானந்த மயமே
தீவினை யோடு பழனிக்குறும் பயமே மூ

ராகம் கமாஸ்] பல்லவி [தாளம் ஆதி

ஏழைக்குத்தானருள் செய்யாயோ ஸ்வாமி
எழில் மழுமானங்கை ஈஸ்வரன்நீயே ஏ

அநுபல்லவி

ஊழ்வினை யாலிந்த உலகத்திலே தினம்
உழன்று உழன்று சற்றுமோய்வற்று அலைந்திடும் ஏ

சரணம்

மெய்யனை மெய்யன்றிருக்கு மெஞ்ஞானியே
மெய்யனை பொய்யென்று தருக்கும் அஞ்ஞானியே
பொய்யினை மெய்யென்று புகலும் பொய் வழியே
பொய்யருய்யும் நாளெந்நாள் பழனிக்கு மொழியே ஏ

ராகம் முகாரி] பல்லவி [தாளம் சாப்பு

இன்னம் ஏன் மயக்கம் ஏழை என் நெஞ்சே
இன்னம் ஏன் மயக்கம் இ

அநுபல்லவி

அன்னம் பாலிக்குந் தில்லை யம்பலமாகிய
பொன்னம்பலத்தி லாடும் புனிதனை போற்றாமல் இ

சரணம்

பொன்னாசையால் தினம் பொருளையும் சேர்த்தோம்
பூமி பொருள் காப்பதில் துன்பத்தை பார்த்தோம்
அன்னோ துன்பத்தை யன்னோ அநுதினம் சேர்ந்தோம்
அரிவையர் போகத்தை யனுபவித்து பார்த்தோம் இ

இன்னல் எனத் தெரிந்து மின்னம் சேர்த்தி[illegible]கொண்டே
இருந்தாலேலடனைகளில் துன்பங்க ளென்றுமுண்டே
கன்னல் கனியென்றுஞ் சடவுளை தினங்கண்டே
கருது பழனிசாமி வாக்கிய மிதை கொண்டே இ

## பார்வதிபதி துதி.

கட்டளைக்கலித்துறை

கேளாமல் மேலவர் மெய்மொழி பொய்யெனக் கேலி செய்வர்
தேளானது கொட்டாமல் தேளென்பரோ தீயர் புவியில்
வாழாமல் பிடித்தெமன் வருத்திடும் போதன்னரகில்
வீழாமலுனை விரும்புவரோ பார்வதி பதியே. 1

முட்டாளெனப் பெயரெடுப்பார் முன்னோர் மொழிநெறியை
விட்டாலும் விடுவர் தீ நெறி விடுவரோ தம்மொரு கண்
கெட்டாலும் பிறர் இருகண் கெடினு மென்றெண்ணி துன்பம்
பட்டாலும் படுவர் பணிவரோ பார்வதி பதியே 2

உரைத்தாலுங் கேட்டிலா நல்லற வொழுக்க முரைத்து மனம்
கரைத்தாலுங் கேட்டிலர் அந்தோ என் செய்வரழியுங் காயம்
திரைத்தாலும் மதிச்சடை யிறைத்தாள் தீயர் நாரையென
நரைத்தாலும் வணங்குவரோ நமப்பார்வதிபதியே 3

சைவராய் வந்த பல்லறிவிலி சின்னாளில் சைவம் விட்டு
செய்வரா லரும் பல்வற்றின் மாமிசம் மதுசேர்த் துண்பர்
உய்வாராயவர் உடல் அழியினும் முறுதி யின்றி
செய்வரோ இவ்வண்ணம் நல்லவர் சிவகாமி பதியே 4

பாதகங்கொலை களகு கட்காமம் பொய்யெனப்பகரா
நிதமும் அறிஞர் மொழி மதியாமலின் னீநிலத்தில்
மதங்கொண்டைந்தையும் செய்வரிறந்த பின் மறலி தூதர்
உதையுங் கொடுப்பின்னென் செய்வரோ உமையின்
மணவாளனே 5

## சிவனடியார் துதி.

ராகம் இந்துஸ்தான் தோடி] பல்லவி [தாளம் செதாள சாபு

ஈசனடியரைத்தானே தினம்
எற்றியே போற்றுவ நானே. ஈ

அநுபல்லவி

பாசமகற்றிய நேயரை யண்டியே
பக்கியை செய்திருப்பேனே ஈ

சரணம்

ஆசையகற்றிய அம்பலவாணன்
அடியரை அன்புடன் போற்றி
தேசத்திருவிழாவைப் போலு மென்றுந்
திருவிளக்கே யவர்க்கேற்றி ஈ

அறுபத்திமூன்று பேர் பட்டணத்துப்பிள்ளை
தாயுமான ராமலிங்கம்
சிறுவணிப் பூமியில் மற்றுளடியர் மேல்
செப்பலங்காரங்கள் பொங்கும் ஈ

மல்லப்பதியினில் நல்லவா தொண்டுசெய்
பழனிசாமியருள் நேசன்
நல்லிசைக் கீர்த்தனை பாடல் வல்லார்க்கு
நலந்தருவான் பரமேசன் ஈ

## மங்கள வாழ்த்து.

நீர்மதி யணிந்த செய்ய சிவனடஞ் செய்யகாணும்
பார்வதி யம்மை வாழ்க மொழியுணர் புலவர் பாடும்
சீர்துதிக் கருளும் வாணி செய்ய தாள் வாழ்க இந்த்
பாரினிலினியக் கீதம் பன்னாளும் வாழ்க வாழ்க
திங்கள் சூடியவர் வாழி திருமாலும் குகனும் வாழி
அங்கண ரன்பர் வாழி அருமறை நான்கும் வாழி
சங்கையில் குருவும் சைவம் புலவரும் வாழியிந்த
அங்கண் மாஞாலம் வாழி அருந்தமிழ் வாழி! வாழி!!

திருச்சிற்றம்பலம் முற்றிற்று.




# அறிக்கை.

அழகான அச்சு வேலைகளும், ரப்பர் ஸ்டாம்புகளும்,

வால்போஸ்டுகளும் எங்கிரேவிங் வேலைகளும்

மிகவும் குறைந்த சார்ஜில் சுத்தமாய்

செய்து கொடுக்குமிடம் எங்கே?

-: சேலம் :-

## பட்டக்கார் பிரஸில்தான்!